©
தமிழ்நாடு அரசு
2016

கையெழுத்துத் தொடர்

# நிதித் (ஓய்வூதியம்) துறை

## அரசாணை எண்.2, நாள்:04-01-2016.

*(மன்மத, மார்கழி –19, திருவள்ளுவர் ஆண்டு 2046)*

<u>**சுருக்கம்**</u>

**பொங்கல் பண்டிகை, 2016** – ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு பொங்கல் பரிசு வழங்குதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

<u>படிக்கப்பட்டது:</u>

1. அரசாணை (நிலை) எண்.10, நிதி (ஓய்வூதியம்) துறை, நாள்: 08-01-2015.
2. அரசாணை (நிலை) எண்.1, நிதி (படிகள்) துறை, நாள்: 04-01-2016.

-oOo-

<u>**ஆணை:**</u>

அனைத்திந்திய பணிகள் உட்பட, மானியம் பெறும் கல்வி நிறுவனங்கள், உள்ளாட்சி மன்றங்களின் அனைத்துவகை தனி ஓய்வூதியதாரர்கள், முன்னாள் கிராம அலுவலர்கள் உட்பட ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் அனைவருக்கும் ஒரு மொத்த பொங்கல் பரிசுத் தொகையாக ரூ.**500/-** (ரூபாய் ஐநூறு மட்டும்) வழங்கி அரசு ஆணையிடுகிறது.

**2.** இந்த ஆணை மேலே குறிப்பிடப்பட்டுள்ள தற்போதுள்ள ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்கள் அனைவருக்கும் பொருந்தும். மேலும், இவ்வாணை தற்காலிக ஓய்வூதியம் பெறுபவர்களுக்கும் பொருந்தும். இந்தப் பொங்கல் பரிசுத்தொகை, 04-01-2016 நாளன்றோ, அதற்குப் பின்னரோ பணியிலிருந்து ஓய்வுபெறும் பணியாளர்களுக்கும், 04-01-2016 நாளன்றோ அதற்குப் பின்னரோ பணியிலிருக்கையில் இறக்கும் பணியாளர்களின் குடும்பங்களுக்கும் அனுமதிக்கத்தக்கதல்ல.

**3.** 01-10-2014 முதல் 03-01-2016 வரையிலான கால அளவில் பணியிலிருந்து ஓய்வு பெற்றுள்ள / பணியிலிருக்கையில் இறந்துவிட்டவர்களைப் பொருத்தவரையில், மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்டுள்ள அரசாணையில் பிறப்பிக்கப்பட்ட ஆணையின்படி அவர்களுக்கு மிகை ஊதியம் / சிறப்பு மிகை ஊதியம் வழங்கப்பட்டிருக்குமேயாயின், அவர்கள் இந்தப் பொங்கல் பரிசுத்தொகையை பெற தகுதியுடையவர்கள் ஆகமாட்டார்கள். இதற்காக, இந்த ஓய்வூதியதாரர்களுக்குத் தொகை வழங்குவதற்குமுன், சம்பந்தப்பட்ட துறைகளிடமிருந்து தொகை வழங்கப்படவில்லை என்பது குறித்த சான்றிதழைப் பெறுமாறு ஓய்வூதியம் வழங்கும் அதிகாரிகள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**4.** இந்த ஆணை பின்வரும் வகையிலான ஓய்வூதியதாரர்களுக்குப் பொருந்தாது:-

(அ) உலேமா உதவித் தொகைகள், மாநில சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கான உதவித் தொகை பெறுபவர்கள், புகழ்பெற்ற அறிஞர்கள் மற்றும் சிறந்த மனிதர்களுக்கான சமூக உதவித் தொகைகள் பெறும் சிறப்பு ஓய்வூதியதாரர்கள்;

த.பி.பா.

(ஆ) பணியில் இருக்கும் பணியாளர்களுக்குப் பொருந்தக் கூடியவாறான மிகை ஊதியம் / சிறப்பு மிகை ஊதியம் பெறுகின்ற கருணை அடிப்படையில் நியமனம் பெற்றுள்ள குடும்ப ஓய்வூதியதாரர்கள்.

**5.** ஓய்வூதிய முன்னோடித் திட்டத்தின் (Pension Pilot Scheme) கீழ் வரும் ஓய்வூதியதாரர்கள்/ குடும்ப ஓய்வூதியதாரர்களைப் பொருத்தமட்டில், பொங்கல் பரிசுத் தொகை வழங்குவதற்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைகள் பின்பற்றப்படவேண்டும் என்றும் அரசு ஆணையிடுகிறது:-

(i) அரசுச் செலவில் ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியம் பணவிடை மூலம் அனுப்பப்படுவதைப் பொருத்தமட்டில், இந்தப் பொங்கல் பரிசுத்தொகையும் அரசு செலவில் பணவிடை மூலம் அனுப்பப்பட வேண்டும்.

(ii) ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியத்தை வங்கிகள் மூலம் பெறும் ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்களைப் பொருத்தமட்டில்,

(அ) பட்டியலுக்குத் தொகை அளிக்க காசோலை / மின்னணு (ECS) முறை செயலிலுள்ள சென்னை ஓய்வூதியம் வழங்கல் அலுவலகம், மாவட்டக் கருவூலங்கள் மற்றும் சார்நிலை கருவூலங்களில், காசோலைகள் வெளியிட்டு அவற்றை தொகை செலுத்தும் சம்பந்தப்பட்ட வங்கிக் கிளைகளுக்கு அனுப்ப சென்னை ஓய்வூதியம் வழங்கும் அலுவலருக்கும், மாவட்டக் கருவூலங்கள் மற்றும் சார்நிலைக் கருவூலங்களின் அலுவலர்களுக்கும் அனுமதி வழங்கப்படுகிறது. அந்தக் காசோலைகளுடன், ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்களின் சேமிப்பு வங்கிக் கணக்கில் தொகையை வரவு வைக்க அந்தந்த ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்களின் பெயர்கள் அடங்கிய பட்டியல் ஒன்றை இணைத்து அனுப்ப வேண்டும்.

(ஆ) பட்டியலுக்கு தொகை அளிக்க காசோலை / மின்னணு (ECS) முறை செயலில் இல்லாத வங்கி சார்ந்த சார் கருவூலங்களில் (Banking Sub-Treasuries) வங்கிக் கணக்கு காசோலை / வங்கி வரைவு காசோலை எடுத்து அவற்றை ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்கள் சேமிப்பு வங்கிக் கணக்கில் வரவு வைப்பதற்காக சம்பந்தப்பட்ட ஓய்வூதியம் வழங்கும் வங்கிக் கிளைகளுக்கு அவற்றை அனுப்பி வைக்க சார்நிலைக் கருவூல அலுவலர்களுக்கு அனுமதியளிக்கப்படுகிறது; மற்றும்

(இ) வங்கி சாராத சார்நிலைக் கருவூலங்களைப் (Non-Banking Sub-Treasuries) பொருத்தமட்டில், பொங்கல் பரிசுத் தொகையைப் பெற்று, ஓய்வூதியதாரர்கள், குடும்ப ஓய்வூதியதாரர்களின் சேமிப்பு வங்கிக் கணக்கில் தொகையை வரவு வைக்க, வங்கிகளின் சம்பந்தப்பட்ட தொகை செலுத்தும் கிளைகளுக்கு அவற்றை அனுப்ப ஏற்பாடு செய்ய சார்நிலைக் கருவூல அதிகாரிகளுக்கு அனுமதி வழங்கப்படுகிறது.

**6.** பொதுத்துறை வங்கித் திட்டத்தின் (Public Sector Bank Scheme) கீழ் வரும் ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்களைப் பொருத்தமட்டில், ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்கள் கணக்கில் நேரடியாகத் தொகையை வரவு வைக்க அனைத்துப் பொதுத் துறை வங்கிகளுக்கும் அனுமதி வழங்கப்படுகிறது.

**7.** மாநில தொகு நிதியிலிருந்து ஓய்வூதியம் வழங்குதல் குறித்த செலவு செய்யப்படும் வகையிலான ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்களைப் பொருத்தமட்டில், இந்த செலவு கீழ்க்கண்டுள்ள கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்படவேண்டும்:

"2071. ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் – 01. சிவில் – 800. ஏனைய செலவு - I. திட்டத்தில் சேராதது – AF.ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்குப் பொங்கல் பரிசு – 27. ஓய்வூதியங்கள் – 09. ஏனையவை (து.தொ.கு.2071 01 800 AF 2799)".

முன்னாள் கிராம அலுவலர்களுக்கு வழங்கப்படும் பொங்கல் பரிசுத் தொகை குறித்த செலவினம் கீழ்க்கண்டுள்ள கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்படவேண்டும்:

"2071. ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் – 01. சிவில் –800 ஏனைய செலவு – I. திட்டத்தில் சேராதது – AK.ஏனைய செலவு – முன்னாள் கிராம அலுவலர்களுக்கு பொங்கல் பரிசு – 27. ஓய்வூதியங்கள்–**09.** ஏனையவை (து.தொ.கு.2071 01 800 AK 2799)".

**8.** உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநரால் கணக்கு வைத்துவரும் நிதி அல்லது நகராட்சி நிதியிலிருந்து ஓய்வூதியம் குறித்த செலவு செய்யப்படும் வகையிலான உள்ளாட்சி மன்றங்களின் ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்களைப் பொருத்தமட்டில், இந்த செலவு மேலே குறிப்பிட்டுள்ள அந்தந்த நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட வேண்டும்.

**9.** மேலே அனுமதிக்கப்பட்ட பொங்கல் பரிசுத் தொகையை ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்கள் மற்றும் முன்னாள் கிராம அலுவலர்களுக்கு உடனடியாக பெற்று வழங்க அறிவுறுத்தப்படுகிறது.

**10.** 2015-2016-ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் சம்பந்தப்பட்ட கணக்குத் தலைப்பின் கீழ் போதிய நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது. எனினும், கூடுதல் நிதியொதுக்கம் தேவைப்படும் பட்சத்தில், சம்பந்தப்பட்ட கணக்குத் தலைப்பின் கீழ் தேவையான கூடுதல் நிதியொதுக்கம் 2015-2016–ஆம் நிதியாண்டிற்கான இறுதித் திருத்த நிதியொதுக்கத்தில் சேர்க்கப்படும். அத்தகைய நிதியொதுக்கத்தினை எதிர்நோக்கி தேவையான தொகையினை செலவு செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது.

**11.** இந்த ஆணை கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.1841 (ஆயிரத்து எண்ணூற்று நாற்பத்தொன்று) உடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**க.சண்முகம்**
**அரசு முதன்மைச் செயலாளர்.**

பெறுநர்
அனைத்து அரசுச் செயலாளர்கள்.
தலைமைச் செயலகத்தின் அனைத்து துறைகள்.
சட்டமன்ற பேரவைச் செயலகம், சென்னை–600 009.
ஆளுநரின் செயலகம், ராஜ்பவன், சென்னை–600 032.
மாநில தகவல் ஆணையம், எண்.2, தியாகராய சாலை, எல்டாம்ஸ்ரோடு சந்திப்பு, தேனாம்பேட்டை, சென்னை–600 018.
அனைத்துத் துறைத் தலைவர்கள்.
மாநிலக் கணக்கு துறைத் தலைவர் (கணக்குகள் மற்றும் உரிமைத்தொகை), சென்னை–600 018. (பெயரில்)
மாநிலக் கணக்கு துறைத் தலைவர் (கணக்குகள் மற்றும் உரிமைத்தொகை), சென்னை–600 018.
முதன்மை மாநிலக் கணக்கு துறைத் தலைவர் (தணிக்கை-I), சென்னை–600 018.
மாநிலக் கணக்கு துறைத் தலைவர் (தணிக்கை-II), சென்னை–600 018.
மாநிலக் கணக்கு துறைத் தலைவர் (CAB), சென்னை–600 009.
பதிவாளர், உயர்நீதிமன்றம், சென்னை– 600 104.
செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை.600 003.
மாநகராட்சி ஆணையர், சென்னை / மதுரை / கோயம்புத்தூர் / திருச்சிராப்பள்ளி / சேலம் / திருநெல்வேலி / ஈரோடு / திருப்பூர்/ வேலூர் / தூத்துக்குடி / தஞ்சாவூர் / திண்டுக்கல்.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் / மாவட்ட நீதிபதிகள் / முதன்மை நீதித்துறை மாஜிஸ்ட்ரேட்டுகள்.

அனைத்து மண்டல இணை இயக்குநர்கள், கருவூலக் கணக்குத் துறை.
ஓய்வூதியம் வழங்கும் அலுவலர், சென்னை–600 006.
அனைத்து கருவூல அலுவலர்கள்/அனைத்து துணைக் கருவூல அலுவலர்கள்.
அனைத்து மாநிலக் கழகங்கள் / நிறுவனங்கள்.

**நகல் பெறுநர்:**

முதலமைச்சரின் தனிச் செயலாளர், சென்னை–600 009.
நிதித்துறையின் அனைத்து பிரிவுகள், சென்னை–600 009.
ஓய்வூதிய இயக்குநர், டி.எம்.எஸ். வளாகம், சென்னை–600 006.
கருவூலக் கணக்கு ஆணையர், சென்னை–600 015.
உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர், சென்னை–600 108.
அனைத்து நகராட்சி ஆணையர்கள்.
அனைத்து ஊராட்சி ஒன்றிய ஆணையர்கள்.
இந்திய ரிசர்வ் வங்கி, சென்னை – 600 001.
இந்திய ரிசர்வ் வங்கி, அரசு மற்றும் வங்கிகள் கணக்குத் துறை, மத்திய அலுவலகம், மும்பை மத்திய இரயில் நிலையம் எதிரில், பைகுல்லா, மும்பை–400 008 (75 நகல்கள்)
பொதுத்துறை வங்கிகளின் அனைத்து தலைமை அலுவலகங்கள் / மண்டல அலுவலகங்கள் – ஓய்வூதிய இயக்குநர், டி.எம்.எஸ். வளாகம், சென்னை–600 006. மூலமாக.
அனைத்து பொதுத்துறை வங்கிகள் – ஓய்வூதிய இயக்குநர், டி.எம்.எஸ். வளாகம், சென்னை–600 006. மூலமாக.
தலைவர், தமிழ்நாடு ஓய்வூதியர் சங்கம், டி.பி.ஐ. வளாகம், கல்லூரிச் சாலை, சென்னை–600 006.
தலைவர், தமிழ்நாடு தலைமைச் செயலக ஓய்வுபெற்ற அலுவலர்கள் சங்கம், எண். 70, மேடவாக்கம் டேங்க் சாலை, கீழ்பாக்கம், சென்னை–600 010.
தலைவர், அனைத்திந்திய ஓய்வுபெற்றோர் சங்கக் கூட்டமைப்பு, 22, கவரத் தெரு, மேற்கு சைதாப்பேட்டை, சென்னை–600 015.
தலைவர், ஓய்வுபெற்ற ஆசிரியர் சங்கம், எண் 12, அபயாம்பாள்புரம், மயிலாடுதுறை, நாகப்பட்டினம் மாவட்டம்.
மாநிலத் தலைவர், அகில பாரத குடிமை பெற்றோர் மற்றும் ஓய்வூதியர் அமைப்பு, எண் 7, பாரதிதாசன் சாலை, அவினாசி, கோயம்புத்தூர் மாவட்டம்.
தலைவர், இந்திய அதிகாரிகள் சங்கம், எண் 35, திரு.வி.க. நெடுஞ்சாலை, இராயப்பேட்டை நெடுஞ்சாலை, சென்னை–600 014.
தலைவர், தமிழ்நாடு முதியோர் குடியுரிமை பெற்றோர் சங்கம், எண் வி 95, அண்ணா நகர், சென்னை– 600 040.
தலைவர், தமிழ்நாடு முதுநிலை குடியுரிமை பெற்றோர் மற்றும் ஓய்வூதியர்கள் நல சங்கம், எண் 38–பி, முதல் பிரதான சாலை, பெருமாள்புரம், திருநெல்வேலி.
தலைவர், ஓய்வுபெற்ற அலுவலர் சங்கம், நாராயணராவ் மாளிகை, முத்துகாளத்தி தெரு, திருவல்லிகேணி, சென்னை– 600 005.
தலைவர், அரசு டான்சி ஓய்வு பெற்ற ஊழியர்கள் சங்கம், Plot No.65, தாமரை சாலை, அய்யப்பா நகர், பம்பல், சென்னை- 600 075.
இருப்புக் கோப்பு / உபரி நகல்கள்.

**–/ ஆணைப்படி : அனுப்பப்படுகிறது /–**

04/01/2016

**ஆராய்ச்சி அலுவலர்.**